செ.வெ.எண்.65 நாள்: 26.11.2019

தூத்துக்குடி மாவட்ட அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான

"ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா" இன்று நடைபெற்றது

---

தூத்துக்குடி மாவட்ட சுற்றுலாத்துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவை இணைந்து சுற்றுலாத்தலங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஏழை, எளிய மற்றும் அதிக மதிப்பெண்கள் பெற்று வரும் அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கான "ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா" துவக்க நிகழ்ச்சி 26-11-2019 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 8.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலக வளாகத்தில் வைத்து துவங்கியது. விழிப்புணர்வு சுற்றுலாவை தூத்துக்குடி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. அ. ஞானகௌரி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இவ்விழிப்புணர்வு சுற்றுலாவிற்கு தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவியர்கள் தென்காசி மாவட்டம் குற்றலாத்திற்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். சுற்றுலாவில் மாணவ, மாணவிகளிடையே சுற்றுலா விழிப்புணர்வு தொடர்பான வினாடி-வினா போட்டிகள் நடத்தப்பட்டது. வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு குற்றாலம் ஓட்டல் தமிழ்நாடு மேலாளர் திரு. கருப்பையா அவர்கள் சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கி வாழ்த்தினார்கள். இச்சுற்றுலாவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு. க. சீனிவாசன் மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. அ. ஞானகௌரி ஆகியோர்கள் செய்திருந்தார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.